35

# MALLICA

மல்லிகா

BY

RAJAGOPALA AIYANGAR

O13,3M,M
3IN11
85268

ஸ்ரீ:

# மல்லிகா

என்ற

# மதனமனோஹரி

BY

V. RAJAGOPALA AIYANGAR

*Tamil Pandit & author of*

*'Ivanhoe' and 'The Talisman' in Tamil & Etc., Etc.*

MADRAS: G. C. LOGANADHAM BROS.
THE GUARDIAN PRESS, MOUNT ROAD

*Copy Right Registered*] *[Price As,* 2

1911

MADRÀS : G C LOGANADHAM BROS.
THE GUARDIAN PRESS, MOUNT ROAD.,

# PREFACE

This is an adaptation of the famous Greek story of Cupid and Psyche. Some changes have been made to suit our mythology : thus *Mallika* stands in the place of *Psyche* and *Rathi* for *Venus*, and some minor changes have followed incidental to these.

This is intended to be the first of the bon-bon series for youths.

THE AUTHOR

2409
896.8113

ஸ்ரீ:

# மல்லிகா

என்ற

# மதனமனோஹரி

---

## அத்தியாயம் 1

"பெற்ருற் பெறின்பெறுவர் பெண்டிர் பெருஞ்சிறப்புப்
புத்தேளிர் வாழும் உலகு"—குறள்.

**பொ**ன்னுலகமோ குபேரபட்டணமோவென்று கண்டோர் கொண்டாடும் சிறப்பு வாய்ந்த தேவகிபுரம் என்னும் பட்டணத்தில் ஸுலோசனன் என்னும் மன்னன் வேதங்கள், வேதாங்கங்கள், புராணங்கள், சாஸ்திரங்கள், இதிஹாஸங்கள், ஸ்மிருதிகள், ஆகமங்கள் முதலிய ஸகல கலைகளையும் கற்று, தனுர்வேதம், மல்லுயுத்தம், ரதாரோகணம், துரகாரோகணம் முதலிய க்ஷத்ரிய தர்ம வித்தைகளிலும் பயின்று, வல்லவனாய், தன்னுயிர்போல மன்னுயிரைப் பாதுகாத்து, பருந்தும் புறுவும் ஒரு கூட்டில் வாழவும், புலியும் பசுவும் ஒரு துறையில் நீர் பருகவும், கீரியும் பாம்பும் கிளையுறவு கொண்டாடவும், பிராம்மணர்கள் ஒழுக்க முறை தவருது வேதமோதி வரவும், க்ஷத்ரியர்கள் திருடர் முதலிய பகைவர்களால் ஜனங்களுக்குத் தீங்கு விளையாமற் காத்து, அவர்களிடத்து ஆறிலொரு கடமை வாங்கிவரவும், வணிகர்கள் அதிக லாபத்தைக் கருதாது, நியாயமான விலைக்குப் பண்டங்கொண்டு விற்றுவரவும், சூத்ரர்கள் த்விஜர்களாகிய பிராம்மணர், க்ஷத்ரியர், வைசியர்களுக்குப் பயபக்தியுடன் பணிவிடை செய்து

வரவும், மாதம் மும்மாரி பெய்யவும், நாட்டில் பஞ்சம், பிணி, கலகம், துர்மரணம், அகாலமரணம் முதலிய விபத்துக்கள் ஒழியவும், பூமி ஏராளமான பலனைத் தரவும், பசுக்கள் குடங்குடமாகப் பாலைச் சொரியவும், விருக்ஷங்கள் பருவகாலத்திற் பூத்துக் காய்த்துக் கனிகளை நல்கவும், உலகம் ஸுபிக்ஷமாக வாழவும் தனது ஆஜ்ஞாசக்ரத்தைச் செலுத்தி வந்தான்.

இவ்வாறு தர்ம தேவதையே ஸுலோசன மன்னனாக உருவெடுத்துவந்து, ராஜ்ய பரிபாலனஞ் செய்து வருகிறதென்று உலகமெல்லாம் புகழ, அவன் சிறிதும் தன்னயங்கருதாமல், குடிகளுக்கு ஒரு பிதாவைப்போல, அவர்கள் க்ஷேமத்தில் நாட்டமுற்று, கோதானம் பூதானம் முதலிய பத்துவகை தானங்களையும், ஆதுலர்க்குச் சாலை ஓதுவார்க்கு உணவு முதலிய முப்பத்திரண்டு தர்மங்களையும், அச்வமேதம், வாஜபேயம் முதலிய பதினெண்வகை யாகங்களையும் விதிப்படி செய்து, பிரம்மசாரிகள், வானப்ரஸ்தர்கள், ஸந்யாஸிகள் என்ற மூன்று ஆச்ரமத்தார்க்கும் ஆதித்யஞ் செய்வதையும், தன் பந்துக்களில் ஏழைகளுக்கு வேண்டிய பொருள்களைக் கொடுத்து ரக்ஷிப்பதையும் பொழுது போக்காகக் கொண்டு, தன் ஏக பத்னியாகிய காமவல்லியுடன் இன்புற்று வாழ்ந்து வருநாளில், தனக்கு விருத்தாப்பியம் வந்தும், புத்திர பாக்கியமுண்டாகாமையைக் குறித்து வியசனித்து, இராஜ்யத்தை மந்திரி வசத்தில் ஒப்பித்து, காமவல்லியுடன் சேர்ந்து, திவ்யஸ்தல யாத்திரைக்குப் புறப்பட்டு, முதலில் காசி க்ஷேத்திரத்தை யடைந்தான்.

ஆங்கு ஸோமநாத ஸ்வாமியைத் தரிசிக்க ஆலயத்துக்குள் நுழைந்து, பிரதக்ஷண நமஸ்காரங்கள் செய்து, அவர் ஸந்நிதியில் திருநீறு பெற்றுக்கொண்டு, திரும்பி வருகையில், ஒருஸாது அவனைக்கண்டு, 'ஓ! அரசனே! உனக்கு இந்த ஜன்மத்தில் பிள்ளைப்பேறு உண்டாகாது. மூன்று பெண்கள் மட்டும் பிறக்கும். ஊருக்குப்போ' என்று அனுக்ரஹஞ் செய்ய, அரசன் ஒரு கண் தெரியப்பெற்ற பிறவிக்குருடனைப்போல மகிழ்ந்து, அந்த ஸாதுக்

OFFICE OF ... BOOKS 28 JUN 1911 MADRAS.

குத் தண்டம் ஸமர்ப்பித்து, விடைபெற்றுக்கொண்டு, ஊருக்கு வந்த சிலநாளைக்கெல்லாம், அவன் மனைவி கருப்பவதியாகி, மூன்று குமாரத்திகளைப் பெற்றனள். மகா ஸுந்தரமுள்ள அக்குழந்தைகளை அவன் மிகவும் செல்வமாக வளர்ப்பித்து வந்து, ஐந்து வயதானவுடன் அக்ஷராப்பியாஸமும் செய்விக்க, இராஜ குமாரத்தி மூவரும் சில வருஷங்களுக்குள் ஸகல கலைகளிலும் வல்லவராய், ஸரஸ்வதியோ என்று வித்வான்கள் புகழும்படி நிபுணர்களாய் விளங்கினர். அப்பெண்களுள் கடைக்குட்டியான மல்லிகா என்ற மங்கை ரூபத்தில் திருமகள்போலும், கற்பில் அருந்ததிபோலும், பொறுமையில் பூமிதேவி போலும் உலகத்துக்கே ஒருஜோதிபோல விளங்கினமையால், ஜனங்கள் அவளைத் திரிலோக ஸுந்தரி என்று புகழ்ந்து, மன்மதனையும் ரதியையும் உத்தேசித்துக் கொண்டாடும் திருவிழாவை நிறுத்திவிட்டு, மல்லிகாவின் பெருமைகளைச் சிறப்பித்து உத்ஸவங்கள் நடத்தத் தலைப்பட்டனர்.

இவ்வாறு சிலவருஷங்களாக உலகத்திலே காமன் திருவிழா நடத்தப்பெறுமல், 'மல்லிகா மஹோத்ஸவம்' என்ற ஒன்று கொண்டாடப்படுவதைக் கண்ட மன்மதனது மனைவியான ரதி தேவி கடுஞ்சினமடைந்து, "விண்ணவர்கள் நிற்க, இம்மன்னவன் மகளுக்கு இவ்வளவு என்ன? இவளை லகுவில் விடுவதில்லை" என்று பொங்கியெழுந்து, தனது தலைமயிரைப் பிய்த்துக்கொண்டும், கைவளையலை உடைத்துக்கொண்டும், 'ஹோ' என்று அலறிக்கொண்டும், தன் பிதாவான பரமசிவனிடத்திற் சென்று, அழுதகண்ணும் சிந்திய மூக்குமாக அவர் காலில் விழுந்து, "ஐயனே! நீர் என்னையே உலகத்திலுள்ள ஸ்திரீகளுக்கெல்லாம் அழகிற் சிறந்தவளாயிருவென்று அனுக்ரஹித்திருக்க, தேவகிபுரத்து ஸுலோசன அரசன் மகள் மல்லிகாவை உலகம் ஸுந்தரி என்று கொண்டாடி, என்னை மறந்து விட்டதே!" என்று அலறினள்.

சிவபெருமான் மகளின் துக்கத்தைக்கண்டு ஸஹியாதவராய்

மன்மதனை உடனே வருவித்து, "மருமானே! ஏது நீர் உமது மனைவியை அழவிட்டுவிட்டீர்? அவளை ஸமாதானப்படுத்தும்" என்று ஆஜ்ஞாபிக்க, அவன் மனைவியைக் கட்டியணைத்து, "என் கண்மணீ! நீ ஏன் துக்கிக்கிறாய்? உனக்கு வேண்டியதைக்கேள். தருவேன்" என்னலும், அவள், "நாதா! என் அழகு, கீர்த்தி எல்லாவற்றையும் மல்லிகா மறைத்துவிட்டாள். அவளை இப்பொழுதே சிக்ஷிக்கவேண்டும். நீர் ஏதாவது உபாயம்பண்ணி, அவள் கீழான ஒரு மடையனைக் காதலிக்கும்படி செய்யும்" என்றனள். காமன் மாமன் கோபத்துக்கும் மனைவி பிடிவாதத்துக்கும் அஞ்சி, "அப்படியேசெய்கிறேன்" என்று உறுதி சொல்லிவிட்டு, இரவு பதினைந்து நாழிகைக்கு மல்லிகாவின் பூங்காவில் நுழைந்து, அதன்வழியாக அவள் நித்திரை செய்யும் நிலாவெளிமுற்றத்தை அடைந்து, ஹம்ஸதூலிகா மஞ்சத்தில் அவள் அயர்ந்து நித்திரை செய்யும் ஸமயங்கண்டு, ஸமீபத்திற்சென்று, அவளுடைய தாமரை போன்ற திருக்கண்களிலே தான் கொண்டுவந்த ஒருவிஷப்பூண்டின் ரஸத்தைப் பிழிந்தான். அதேக்ஷணத்தில் ஆகாயத்திலே சந்திரனை மறைத்திருந்த மேகம் விலகலும், நிலாவெளிச்சத்திலே அவளது திருமுகம் அந்தரத்து உலாவிய சந்திரபிம்பமே இந்த ஸௌந்தரிரூபமாக வந்திடலாயிற்றோ என்று மயங்கும்படி அதிரூபசௌந்தரியத்தோடு விளங்க, அதைக்கண்ட மாரன் மயங்கி விழுந்து, அவ்விடத்திலேயே மூர்ச்சித்துப் போய்விட்டான்.

சிறிது நேரத்திற்கெல்லாம் தெளிந்தெழுந்து, "ஐயோ! இந்த ஸௌந்தரிக்கா அந்தரதி தேவி கேடு நினைந்தாள்? அவளுடைய துர்ப்போதனையைக் கேட்டேனே!" என்று பச்சாத்தாபமுற்று, ஒரு நொடிக்குள் ஸஞ்சீவி பர்வதத்துக்குச் சென்று, சிந்தாமணி ஒஷதியை எடுத்துவந்து, அவள் கண்ணில் பிழிந்து, முன் பிழிந்த விஷப்பூண்டின் தோஷத்தை மாற்றிவிட்டுப் போய்விட்டான்.

## அத்தியாயம் 2

மறுநாள் மல்லிகா விழித்துக்கொண்டதும் அவள் முகத்தைப்பார்த்த அவளது தோழிமாரனைவரும், "ஆஹா! இவளழகு என்ன அழகு! இன்றைக்கு இவள் ஏதோ ஒரு நூதன கன்னிகைபோல விளங்குகிறுளே!" என்று அதிசயித்துக்கொண்டாடும்படி மன்மதன் பிழிந்த சிந்தாமணி ஒஷதியின் மகிமையினுல் அவள் அதிக அழகு பெற்று, ஞானத்திலும் கல்வியிலும் மிக்கவளாய், மன்மதனும் தன்மீது மோகங்கொள்ளும்படி மகா ரூபவதியாயினுள். மாரனே ரதிதேவிக்கும் பரமசிவனுக்கும் அஞ்சி, தன் காதலை வெளிப்படுத்தாது மறைத்துக்கொண்டிருந்தான். ஆனபோதிலும், ரதிதேவி மல்லிகாவின் அதிகரித்த அழகைக்கண்டு, மன்மதன் விஷமமே இது என்று ஊகித்தறிந்து, "ஒகோ! இவள் நமது நாயகனை மயக்கிவிட்டாள்" என்று கொதித்தெழுந்து, "ஓ! மனுஷ்யப்பதரே! நீ அழிந்து போகாததுமன்றி, என் பர்த்தாவையும் மயக்கிவிட்டனையா? பார், உன்னை என்ன பாடு படுத்துகிறேன்! உனக்கு உலகத்தில் ஒரு கணவனும் வாராதிருக்கக்கடவது" என்று சபித்து, ஸுலோசனையுடைய மற்ற இரண்டு குமாரத்திகளுக்கும் நல்ல சக்ரவர்த்திகள் கணவராக வரட்டுமென்று அனுக்ரஹமுஞ் செய்தாள்.

உலகத்திலே எப்பொழுதும் பொருமையுள்ளவர்கள் தாம் யாரைக்கண்டு வயிறு எரிகிறுர்களோ, அவருடைய அண்டை வீட்டுக்காரருக்கு நன்மை செய்வதால், தங்கள் விரோதிக்குத் தீமை செய்வதாக எண்ணிக்கொள்வார்கள். அப்படியே ரதிதேவியும் மல்லிகாவின் ஸஹோதரிகளுக்கு நல்ல வரனுக அமையும்படி அனுக்ரஹம் செய்வதால், மல்லிகாவுக்குத் தீமை செய்வதாக எண்ணிக்கொண்டாள். ஆனபோதிலும் நமது மல்லிகா ரதியைப் போலப் பொருமைக்காரியாயிருந்தாலன்றோ, அவளுக்குத் தன் ஸஹோதரிகள் நல்ல புருஷரை மணந்ததனுல்

பொறுமை உண்டாயிருக்கும்? இது நிற்க, ஸுலோசனன் தன் பெண்களுக்கு ஸ்வயம்வரம் கோடித்தான். அப்பொழுது அவனது முதலிரண்டு பெண்களும் தக்க சக்ரவர்த்திகளை வரித்து, மணம் புரிந்தனர். ஆனால் மல்லிகாவுக்கு ஸ்வயம்வரம் என்று திருமுகம் விட்டதும், ஓரரசனாவது வரவில்லை. எல்லா அரசருடைய மனத்திலும் ரதி புகுந்துகொண்டு கலக்க அவர்கள், 'ஆ! மல்லிகா நமக்குக் கிடைக்கக்கூடியவளா?' என்று நினைத்துத் தம்மூரிலேயே இருந்துவிட்டார்கள். தன் பெண்ணுக்கு மணவாளன் வாராததைக்கண்ட ஸுலோசனன், மந்திரி முதலானோரோடு ஆலோசனை செய்து, பெரியோர்களை நோக்கி, "பூஜ்யர்களே! என்பெண் அழகிற் குறைந்தவளா? குணத்தில் தாழ்ந்தவளா? கல்வியில் இளைத்தவளா? கற்பில் சளைத்தவளா? ஒன்றிலும் தோஷமுள்ளவளில்லையே! இஃது எதோ தெய்வக் கோளாறாக இருக்கின்றதே!" என்று புலம்ப, அத்தருணத்தில் ஆகாயத்தினின்றும், "ஓ! ஸுலோசனா! உன் மகளை ஹிமோத்பர்வதத்தின் சிகரத்திற்கொண்டுபோய் விட்டு விட்டுவா. அவளுக்கு க்ஷேமமுண்டாகும்" என்று ஓர் அசரீரவாக்குப் பிறந்தது. இதைக்கேட்ட மன்னன் யாது செய்வான்! நாராசம் காய்ச்சி நடுச்செவியில் நுழைக்கப்பெற்றாற்போலும் தன்காதில் நுழைந்த அச்சொல்லாற்புண்பட்டு, 'ஐயோ தெய்வமே! என் குழந்தையை இவ்வளவு பாடுபட்டுப்பெற்று வளர்த்துப் பெருங்கல்வி போதித்ததெல்லாம் மலையிலிருந்து கீழேதள்ளி மாய்க்கவா? கிளியைவளர்த்துப் பூனைக்கு இரையாகக் கொடுப்பாருண்டோ? தேவாமிருதத்தைச் சேற்றில் ஊற்றுவாருண்டோ? பசுவைப்பிடித்துப் புலிக்கு இரையிடுவாருண்டோ? என்ன பாபம் செய்தேனோ? கோவிற்கதவைக் குறுக்க அடைத்தேனோ? குளத்துநீரைக் குழப்பிக்கெடுத்தேனோ? கன்றுக்குப் பாலூட்டாது கட்டிவைத்தேனோ? செல்லும் வழியில் முள்ளைப் பரப்பினேனோ? கல்லும் நெல்லும் கலந்து விற்றேனோ? இந்த ஜன்மத்தில் ஒன்றுஞ் செய்யாவிடினும் பூர்வ ஜன்மத்திலாவது மகாபாதகங்களைச் செய்திருக்கவேண்டும்

என்று புலம்பி வாயிலும் வயிற்றிலும் அறைந்துகொண்டு, வெட்டிச்சாய்த்த மரம்போலச் சிங்காதனத்தினின்றும் 'திடீரென்று' விழுந்து, மூர்ச்சித்துப் போய்விட்டான்.

அருகிலிருந்த மந்திரி முதலானவர் செய்த சைத்யோபசாரத்தால் மூர்ச்சை தெளிந்தெழுந்து, 'மந்திரிகளே! நான் என்மல்லிகா இறந்த பிறகு உயிர் வாழமாட்டேன். முதலில் என் பிராணனை இழந்துவிடப் போகிறேன். பிறகு அவள் பிழைத்தால் பிழைக்கட்டும், இறந்தால் இறக்கட்டும்' என்று கூறி, அவர்களிடத்தில் இராஜ்யத்தையும் மனைவியையும் ஒப்புவித்துவிட்டு, புத்திரியை அழைத்துக்கொண்டு, இமயமலைச் சிகரத்திலேறி, நின்றுகொண்டு, "மகளே! உன்னை நான் தனியேவிட்டுச் செல்லேன். முதலில் நானே இவ்வகாதமான பாதாளத்தில் விழுந்து மரித்து விடுகிறேன்' என்று விழ எத்தனிக்கையில், மகள் தடுத்து, "அப்பா! நீங்கள் மிகவும் விவேகியாக விருந்தும் ஸமயத்தில் அஜ்ஞானிகளைப் போலப்பேசுகிறீரே! தெய்வம்நிரபராதிகளை ரக்ஷிக்காதா?எனக்கு என் ஆபத்துவரும்? பூர்வம் மலையிலிருந்து விழுந்த ப்ரஹ்லாதன் எவ்வாறு பிழைத்தான்? அந்தப் பக்தனை ரக்ஷித்த பகவான் என்னையும் ரக்ஷிப்பன். நீர் கவலைப்படவேண்டாம். ராஜ்யத்துக்குப் போய், என்னிலும் பலமடங்கு விவேகிகளையும், நல்லோர்களையும் ரக்ஷித்துக்கொண்டிரும். நீர் இங்கு இறப்பதனால் என்னை ரக்ஷிக்க முடியாததுமன்றி, உமது ரக்ஷணையை எதிர்பார்க்கும் சில ஜனங்களைக்கூட நீர் காப்பாற்றாது விடுகிறவராவீர். இதனால் உமக்கு நிச்சயம் பாபம் ஸம்பவிக்கும். ராஜ்யத்துக்குப் போம்" என்றனள். இதைக் கேட்டதும் மன்னனுக்கு முன்னிலும் பலமடங்கு துக்கமுண்டாகி, 'ஐயோ! இவ்வளவு விவேகமுள்ள பெண்ணிரத்தினத்தை இழந்து விடும்படியாயிற்றே! என் விதிப்பயன் இப்படியா இருந்தது? மகாபாபியா நான்?' என்று பலவாறு துக்கமுற்றுப் புலம்பிக் கடைசியில் மனம் தேறி, மெல்ல மெல்லத் தன் பட்டணம் போய்ச் சேர்ந்தான்.

வேந்தன் சென்றபிறகு, அவள், 'இனி இங்குச் சும்மா நிற்பதிற் பயனென்ன? இச்சிகரத்தினின்றும் கீழே விழுந்து இறப்பதே நலம்' என்று துணிந்து, அங்கிருந்து குதிக்கப் போகையில், அவ்விடத்தில் மறைந்திருந்தே பார்த்துக் கொண்டிருந்த மன்மதன் வாயுபகவானை நோக்கி, அவளைப் புஷ்கரத்தீவில் கொண்டு போய்ச் சேர்க்கும்படி ஆஜ்ஞாபிக்க, தென்றல் என்ற வாயு தேவன் மதனனுக்குத் தோராக ஊழியஞ் செய்பவனாதலால், எஜமானன் சொற்படி அப்பெண்மணியை ஸுகமாகத் தூக்கிக் கொண்டுபோய், அந்த த்வீபத்திலே, மிகவும் ரமணீயமாக ஓடுகிற ஓராற்றங்கரையிலே ஒரு புஷ்பசயனத்தின்மீதே மெல்லக் கிடத்திவிட்டுப் போய்விட்டான்.

## அத்தியாயம் 3

மன்மதனுக்கு வாயுதேவன்மீது அளவுகடந்த ஸந்தோஷமுண்டாய், அத்தேவனைப் பலவாறு புகழ்ந்து கொண்டாடினன். 'மல்லிகாவை என்று காண்போம்? எவ்வாறு பேசுவோம்?' என்று அவளையே நினைத்து ஏக்கமுற்றிருந்த அவன் இப்பொழுது அவளைக் கலியாணம் செய்துகொள்ளும் படியான ஸந்தர்ப்பம் நேர்ந்தமைபற்றி, ஸந்தோஷமுடையவனாய், தெய்வத்தைப் பிரார்த்தித்து, ரதிதேவியையும் மனத்துக்குள், 'உன்னாலன்றோ இப்பெண்மணியை நான் காணும்படியாயிற்று' என்று வாழ்த்தலுற்றான். பிறகு விச்வகர்மாவைக் கூப்பிட்டு, அந்த த்வீபத்தில் அழகுள்ள அவ் ஆற்றங்கரையில் திவ்யமான ஒரு மாளிகையும், பூங்காவும், பிறவும் நிர்மித்துப் போம்படி கட்டளையிட, அவன் அவ்வாறே இயற்றிவிட்டுப் போய்ச் சேர்ந்தான். வாயு தேவனால் அந்த த்வீபத்தில் சேர்ப்பிக்கப்பெற்ற மல்லிகாவோ அவ்வழகிய உத்தியான வனத்தையும் மாளிகையையும் கண்டு வியப்புற்று, "ஆ! இது தெய்வீகமாக இருக்கின்றதேயன்றி, மனுஷ்ய நிர்மாணமாகத்தோன்றவில்லை! நாம் இமயமலையினின்றும் இங்கு எப்படி

வந்தோம்? அது எப்படி விசித்திரமானதோ, அப்படியே இம் மாளிகை முதலியனவும் விசித்திரமாகவிருக்கின்றன!" என்று நினைத்து, அதில் நுழைந்து சுற்றிக்கொண்டு வருகையில், "ஓ! அம்மணீ! உமக்கு நாங்கள் அடிமைகள். உமது ஏவலைச்செய்ய வந்திருக்கிறோம். கட்டளையிடுக" என்ற ஒருவாக்குப் பிறக்கக் கேட்டு, பெரு வியப்புற்று, "நீங்கள் யார்? இம்மாளிகை யாருடையது? இத்தேசத்தின் பேரென்ன? நான் இங்கு எவ்வாறு வந்தேன்?" என்று வினவலும், முன்போல அசரீரியாகவே, "ஓ! தேவீ! நாங்கள் இம்மாளிகையைக் காக்கும் பூதங்கள். உமது திருக்கண்களுக்கு மறைந்து நின்று, உமது ஏவலைச் செய்வோம். உமது பிராணனை ரக்ஷித்து, உம்மை இவ்விடத்திற்கொண்டு வந்து சேர்ப்பித்த மகான் ஒருதேவன். அவர் திருநாமத்தை நாங்கள் சொல்லத் துணியோம். அவர் இன்று இராத்திரி வருவார். இத்தீவின் பெயர் புஷ்கர த்வீபம்" என்ற மற்றொரு சப்தம் பிறந்தது. மல்லிகா, 'எல்லாம் ஈசன் செயல்' என்று நினைத்து, 'மஞ்சனமாடுவோம்' என்று பூங்காவில் நுழைந்து, ஒரு தாமரைப் பூஞ்சுனையில் நீராடிவிட்டு, சில புஷ்பங்கள் பறித்துக்கொண்டு மாளிகைக்குள் நுழையலும், ஆ! என்ன ஆச்சரியம்! ஒரு பூதம் பட்டுப் பீதாம்பரம் உடுத்துவிடும், ஒரு பூதம் நவரத்னமிழைத்த தங்கக் கிண்ணத்தில் ஜலங்கொண்டுவந்து வைக்கும், ஒரு பூதம் கண்ணடி காட்டும், ஒருபூதம் திலகமிடும், ஒருபூதம் ஆபரணங்கள் பூட்டும், ஒருபூதம் அன்னம் படைக்கும், ஒருபூதம் கைகால் அலம்பிவிடும், ஒருபூதம் பட்டுக்கொண்டு துடைக்கும், ஒருபூதம் சந்தனம் பூசும், ஒருபூதம் பூச்சூட்டும், ஒரு பூதம் தாம்பூலம் நல்கும். இவ்வாறு பலப் பல பூதங்கள் பற்பல ஊழியங்களைச் செய்ய, ராஜகுமாரத்தி பெருங்களிப்பெய்தி, ஓர் அறையிற் சென்று, ஆங்கு மஞ்சத்திற் படுத்துக்கொண்டாள். உடனே சில பூதம் கை கால்பிடித்தன, சில பூதம் விசிறிகொண்டு வீசின, சில பூதம் பன்னீர் தெளித்தன, சில பூதம் அகிற்புகை ஊட்டின, சிலபூதம் ஸங்கீதம் பாடின. இப்படி இரவு பத்து

வரையில் எல்லாம் ஏவல் செய்தன. பிறகு அவ்வூழியஞ் செய்யும் பூதங்களுள் தலைமைப் பூதம், "ஓ! அம்மணீ இனி உங்கள் நாயகன் வருவார். நாங்கள் போகிறோம்" என்று சொல்லி விளக்குகளை அணைத்துவிட்டு, மறைந்து போயின. சிறிது நேரத்துக்கெல்லாம் அம்மாளிகை முழுவதும் பல கந்தர்வர் கூடிக் கானம் செய்தாற்போல ஸங்கீதம் கேட்டது. திவ்ய பரிமளம் வீசிற்று. தென்றல் அடித்தது. வண்டுகள் ரீங்காரஞ் செய்தன. சந்திரன் அபூர்வமான தேஜஸோடு விளங்கினான். மல்லிகாவின் மனத்திலும் ஒரு குதூஹலம் தோன்றிற்று. "ஆ! இவ்வேளையில் நமக்குத் தோழிமார்களிருந்தால், எவ்வளவோ இன்பமாகப் பொழுது போக்கலாமே!" என்று நினைத்துக்கொண்டாள். இவ்வெண்ணம் அவள் மனத்தில் உதித்த க்ஷணத்திலேயே, ஒரு புருஷன்புஷ்பம் போன்றதன் இருகைகளாலும் அவள் இரு கரங்களையும் பற்றிக்கொண்டு, 'என் கண்மணீ! அஞ்சாதே நீ. நான் ஒரு தேவன். என்னை நீ பார்க்கமுடியாமற்போனாலும், என்னுடைய அனுக்ரஹத்தினால் உனக்கு க்ஷேமம் உண்டாகும். என் பெயரை நான் இப்பொழுது சொல்லமாட்டேன். நீயும் அதை அறிந்துகொள்ளவேண்டாம். நீ மலையிலிருந்து விழுந்த பொழுது, உன்னை ரக்ஷித்து இவ்விடத்திற் கொண்டுவந்து சேர்த்தது நானே. உன்னிடத்தில் ஒரு ஸ்திரீதேவதைக்கு மிகவும் பொறாமையாதலால், அத்தேவதை உனக்குச் செய்த தீமை பல. அவளாலேதான் உன் ஸ்வயம்வரத்துக்கு ஓரரசனும் வரவில்லை. நான்மட்டும் உன்னைக்காதலித்து உனக்கு க்ஷேமத்தைச் செய்துகொண்டே வந்தேன். இப்பொழுது தயைசெய்து என்னை அங்கீகரிப்பாயாக" என்றான்.

மல்லிகா அச்சொல்லைக் கேட்டு, நாணமுடையவளாய் விடை ஒன்றும் பகராது, உடலில் மயிர்க்கூச்சமுற்றுத் தலைகுனிந்து நிற்க, அதைக்கண்டு, அனங்கன் பெருங்களிப்புடையவனாய் அவளை அணைத்துக்கொண்டு, "ஸ்திரிகள் நாயகமே! நீ எனக்கு மனைவியானாய். யானுனக்குக் கணவனானேன்.

013,3M1M
31N11



இனி யான் உன்னை என்றும் கைவிடமாட்டேன். ஆனால் நீ என்றைக்கும் என்னை யார் என்று அறிய முயலக்கூடாது. என் முகத்தையும் நீ பார்க்கப்படாது. என்றைக்கு நீ என்னைக் காண எண்ணுகிறாயோ அன்றைக்கு உனக்கு ஆபத்துவரும்" என்றான்.

அவள், "நல்லது. உம்மை நான் பார்க்கவில்லை. ஸ்திரீகள் புருஷர் சொல்லைக் கேட்கவேண்டும். அப்படிக் கணவன் சொல்லைத்தட்டாமல் நடப்பதே ஸ்திரீகளுக்குக் கற்பு என்று பெரியோர் கூறுகின்றனர். என்னுடைய துர்ப்பாக்கியத்தால் தங்கள் திருமுகமண்டலத்தை நான் காணக் கொடுத்துவைக்கவில்லை. என்னை அங்கீகரித்து ரக்ஷிக்கவேண்டும்' என்றனள் அப் புருஷன் ஸந்தோஷித்து, அன்றிரவு அம்மாளிகையிலே மகிழ்ந்திருந்து, விடியற்காலையில் எழுந்து போய்விட்டான்.

85868

## அத்தியாயம் 4

அவன் போனபிறகு மல்லிகா விழித்துக்கொண்டு பக்கத்தில் நாயகனைக் காணாது, சோகமுற்றவளாய், "ஆ! நாதா! நாதா!" என்று அலறிக்கொண்டு அம்மாளிகை முழுவதும் தேடித் திரிந்தாள். அவளுடைய அழுகையையும் புலம்பலையும் கேட்ட வேலைக்காரப் பூதங்கள், 'அம்மணீ நீர் விசனிக்க வேண்டாம். எங்கள் எஜமானன் இரவு தோறும் வருவார். உமக்கு என்னவேண்டுமோ அதைக் கேளும். உடனே கொண்டு வந்து கொடுக்கிறோம்' என்றன. அவள், 'ஓ! தெய்வங்களே! நீங்கள் என் கண்ணுக்கு மறைந்து நின்று, ஸகல உபசாரங்களையும் செய்தும் என் நாதனைக் காணாது எனக்கு உயிர் தரிக்கவில்லை. அவரை இப்பொழுதே அழைத்துவாரும்' என்றனள். அவை, 'தேவீ! உமது வல்லபர் பகலில் வரமாட்டார். அவரை நீர் பார்க்கவும் கூடாது. இரவு தோறும் நீர் அவரைக் காணலாம்' என, இதைக் கேட்டதும் அவள் அதிக சோகமுற்று அன்று

அன்ன ஆஹாரங்களில் விருப்பமில்லாதவளாய், நெருப்பி விட்ட பூங்கொடிபோல் வாடியிருந்தாள்.

இரவு பத்துநாழிகை யாயிற்று. மையிருளில் அவள் அழுது கொண்டு ஓரிடத்தில் உட்கார்ந்திருக்கையில், மன்மதன் வந்து, அவளை அணைத்துக்கொண்டு, 'என் கண்ணே! நீ அழவேண்டிய காரணமென்ன? உனக்கு என்ன குறை? நான்தான் இரவு தோறும் வருவதாக உனக்கு வாக்களித்திருந்தேனே' என்றான். அவள் 'ஆ! நாதா! நாதா! உம்மை விட்டுப்பிரிந்து, நான் தனியாக உயிர் தரிப்பேனோ? உமது தேன்மொழியைக் கேளாத எனதுசெவிகள் ஸங்கீத கானத்தாலும் திருப்தியை அடையுமோ? நீரில்லாதவிடம் ஸ்வர்க்கமாயினும் நரகத்தையே ஒக்கும். உம்மோடு சேர்ந்திருக்கும் ஸ்தானம் நகரமாயினும் ஸ்வர்க்கத்தை நிகர்க்கும்' என்று அவன்மடியில் விழுந்து துக்கித்தாள். அவன் அவளைத் தேற்றி, 'என் செல்வமே! என்னை நீ பகற்பொழுதிற் காண விரும்பாதே. நான் இரவில் பத்து நாழிகைக்குத் தினமும் உன்னைக் கண்டுபோவேன்' என்று சொல்லிப் பின்னும் அவளுக்குப் பல கதைகளும் நீதிகளும் கூறி மகிழ்வித்து, மறுநாளுதயத்திலும் அவள் தூங்கும்பொழுதே எழுந்து போய்விட்டான்.

இராஜகுமாரத்தி விழித்துக்கொண்டதும் முதல் நாளைப் போலப் பக்கத்தில் கணவனைக் காணாது, 'ஐயோ! நம் தலைவிதி பாதி இன்பமும் பாதித்துன்பமும் அனுபவிக்கும்படி இருக்கிறதே! என்றைக்கு நான் நாயகனை விட்டுப் பிரியாது களித்திருக்கும் பாக்யம் பெறுவேனோ?' என்று புலம்பியிருந்தாள். ஆனால் கணவன் ஸூர்யாஸ்தமன மானதும் வருவான் என்னும் ஆசையால், மஞ்சனமாடி, ஆடையுடுத்துச் சந்தனம்பூசி, பூச்சூடி, அறுசுவை அன்னம் புஜித்துத் தாம்பூலம் தின்று, ஹம்ஸதூளிகா மஞ்சத்தில் உட்கார்ந்து, நாயகன் வருகையை எதிர்நோக்கியிருந்தாள். வழக்கம்போல அவன் பத்து நாழிகைக்கு வந்து சேரலும் அவனை ஆசையோடும் வரவேற்று, பலப்பல வார்த்தைகள் பேசியிருந்து, உல்லாஸமாகக் காலங்கழித்து, இன்பக்கடலுள் ஆழ்ந்

திருந்தாள். அவள் தன்னிடத்துக்கு வரும் புருஷன் ஸாமான்யனில்லை, தேவர்களுள் சிறந்தவனுன இந்திரனே, அன்றிச் சந்திரனே? என்று எண்ணியிருந்ததனுல், அவளுக்கு அவன் முகத்தைப் பார்க்கவேண்டுமென்ருவது அவன் பெயரைக் கேட்கவேண்டுமென்ருவது தோன்றினதில்லை. சிற்சில ஸமயங்களில் அவ்வெண்ணம் வருமாயினும் "கணவன் சொல்லைக் கடந்தால் பாவம் வரும்" என்று நினைத்துத் தன் மனத்தில் எழுந்த ஆவலை அடக்கிக்கொள்வாள்.

தினமும் பகற்பொழுதில் அவள் தனிமையாக உட்கார்ந்து, வீணைமுதலியன வாசிப்பதும், புஸ்தகங்கள் படிப்பதும், பூங்காவில் மான் மயில் முதலிய அழகிய பிராணிகள் உலாவுவதைக் காணுவதும், புஷ்பங்களைக் கொய்வதும், நீராடுவதுமாகக் காலங்கழித்து, இரவில் தன்காதலனுடன் இன்புற்றிருந்தாள்.

## அத்தியாயம் 5

இவ்வாறு ஒரு வருஷகாலம் கழிந்தது. பழகப்பழகப் பாலும் புளிக்கும் என்றபழமொழிப்படி, அவ்வுத்தியான வனத்தின் அழகும் அம்மாளிகையின் ஸுகமும் அவளுக்கு அலுத்துப்போயின. ஒருநாள் இரவில் அவள் தன் கணவன் உல்லாஸமாக இருக்கும் ஸமயம்பார்த்து, 'நாதா! எனக்குப் பகற்பொழுது கழிப்பது மிகவும் கஷ்டமாக இருக்கிறது. பேச்சோடு துணைக்கு ஒருவரையும் காணேன். எனக்கு என் ஸஹோதரிமாரைப் பார்க்கவேண்டுமென்னும் ஆசையுண்டாயிருக்கிறது. சற்றுத் தயைசெய்து அவர்களை ஒரு நாளைக்கு இங்கு அழைத்துவர வேண்டும்' என்ருள். மன்மதன், 'பெண்ணே! உனக்கு வெளுத்ததெல்லாம் பால். உன் ஸஹோதரிகள் உன் அழகைக்கண்டு பொருமைப்பட்டுக்கொண்டிருந்தனர். உனக்கு ஸ்வயம்வரம் கோடித்தபொழுது, ஓரரசனும் வாராமையைக்கண்டு அவர்கள் பெருங்களிப்போடு கூத்தாடினர். அவையெல்லாம் உனக்குத் தெரியாது. எப்படியாவது உன்னை எல்லாரும் பழிக்க

வேண்டுமென்று அவர்கள் நினைத்திருந்தார்கள். இப்பொழுது அவர்கள் உன்னைக் கண்டால், உன் செல்வத்தையும் அந்தஸ்தையும் கண்டு பொருமைப்படுவார்கள். எப்படியாவது உபாயம் பண்ணி உன்னைக் கெடுத்துவிடுவார்கள்' என்றான். ராஜகன்னிகை அவன் சொல்வதற்கெல்லாம் காது கொடாமல் தினம் தினம் அவனைப் பல்காலும் 'நச்சரித்து'க்கொண்டுவர, அவன் மிகவும் அலுத்துப்போய், 'இவள் தலைவிதி எப்படியோ அப்படி நடக்கட்டும். நாம் என்ன தடுத்தாலும் இவள் கேளாள். "கேடுவரும் பின்னே மதிகெட்டுவரும் முன்னே' நாம் சொல்வதைச் சொல்லியாய்விட்டது. நம்மீது இனிக்குற்றமில்லை. ஸ்திரீகள் என்ன விவேகியாயிருந்தாலும், அவர்களுக்குத் துர்க்குணம் போவதில்லை. கஷ்டப்பட்டாலொழிய அவர்களுக்குப் புத்தியும் வாராது' என்று வெறுத்துக்கொண்டு, தன் தோழரகிய தென்றற்காற்றை நோக்கி, 'ஓ! வாயுதேவனே! குவலயத்திலே நீர் ஸஞ்சரியாத இடமில்லையே ! மல்லிகாவின் ஸஹோதரிகளை இங்கு எடுத்துவாரும்'என்றான்.

மன்மதன் கொடுத்த உத்திரவைப் பயபக்தியுடன் ஏற்றுக் கொண்டுசென்ற தென்றலோன் அவ்விரு பெண்களையும் தூங்குகையிலேயே எடுத்துக் கொண்டுபோய் அத்தீவினிற் சேர்த்தவுடனே,அவர்கள் விழித்துக்கொண்டு பார்க்கத் தாங்கள் ஓராற்றங்கரையில் படுத்திருக்கக்கண்டு, எழுந்து சுற்றிப்பார்க்கலும், தோப்பும், துறவும்,மாடமும், மாளிகையுமாகஇருப்பதை நோக்கி, ஆச்சரியமும் பயமும் அதிகரித்தவராய் மெல்லமெல்லச்சென்று, மல்லிகாவின் மாளிகையினுள் அஞ்சிஅஞ்சி நுழைந்தனர். ஆசாரவாசலைக் கடந்து, அந்தப்புரத்தை அணுகலும், தமது தங்கையைக் கண்டு, ஒன்றுந்தோன்ருது திகைத்து, 'இஃதென்னை மாயமோ? மந்திரமோ? கனவோ! கடும்பித்தமோ?' என்று மயங்கி நிற்க, இவர்களைக் கண்ட மல்லிகா ஒரே ஓட்டமாக ஓடிச் சென்று, அவ்விருவரையும் கட்டிக் கொண்டு, 'அக்காள்! அக்காள்! உங்களைக் காணும்படி நேர்ந்த என் பாக்யமே பாக்யம். உங்களை

இங்கு அழைப்பிக்கும்படி என் நாதரை நான் எவ்வளவு நாளாக வேண்டினேன் தெரியுமா? இன்றைக்குத்தான் அவருக்கு என் மீது தயையுண்டாகி, உங்களை இங்கு வருவித்தார். நீங்கள் உங்கள் புக்ககத்தில் ஸுகமாக இருக்கிறீர்களா? உங்களுக்குக் குழந்தைகளுண்டா? உங்கள் கணவன்மார் உங்களை ஆதரவோடு ரக்ஷித்து வருகிறார்களா?" என்றுபலப்பல கேள்விகள் கேட்டாள்.

அவ்விருவரும், 'அம்மா! என் அருமைக்குழந்தாய்! உன்னைக்கண்ட இக்கண்களே பாக்கியம்பெற்றவை. அம்மா! நீ மலை மீதிருந்து குதித்தனையே! நல்லவேளையாகத் தப்பிப்பிழைத்து இங்குவந்து சேர்ந்தாயே? உன்னைத் துஷ்ட மிருகங்கள் வதைக் காது விட்டனவே!" என்று அவளைக் கட்டிக்கொண்டு இன்பக் கண்ணீரும் துன்பக்கண்ணீரும் விட்டனர்.

ஆனால், உண்மையில் அவ்விரு பெண்களும் மல்லிகா வின் செல்வத்தையும், அவளுக்கு நடக்கும் உபசாரத்தையும், அவள் குதூஹலத்துடன் இன்பம் அனுபவிப்பதையும் காண ஸஹிக்கவில்லை. உள்ளூர அவர்களுக்குப் பொறாமை யதிகரித் தது. அதை அவர்கள் வெளிக்காட்டாமல், தங்கையினிடத்தில் மிகவும் அன்போடு பழகுவதுபோலப் பாவனைபண்ணி, ஒருமாதகாலம் அவ்விடத்திலேயே வஸித்தனர்.

## அத்தியாயம் 6

ஒருநாள் மல்லிகாவின் ஸஹோதரிகள் இருவரும் தங்கை யைப் பிரிந்துபோய் மதனன் பூங்காவிலே தனியாக உலாவிக் கொண்டிருக்கையில், மூத்தவள் இளையவளை நோக்கி, "தங்காய் மல்லிகா இறந்துபோனாள், நம்மை அழகால் ஜயிக்க வல்லவர் இனி ஒருவருமில்லை என்று நினைத்திருந்தோமே தெய்வம் இவளைக் காப்பாற்றினதுமன்றித் தேவபோகத்தையு மன்றோ இவளுக்கு அளித்துவிட்டது! இவள் அழகைப் பார்த் தையா? முன்னிலும் பதின்மடங்கு அதிகரித்திருக்கிறதே! நாம் வரவரக் கிழவிகளாகிறோமே. இவள் வரவரச் சிறுபெண்ணாகி

ளுளே! நமது கணவர் நம்மை வெறுக்கிருரே. இவள் கணவன் நேற்று இவளோடு எவ்வளவு உல்லாஸமாகப் பேசிக்கொண்டிருந்தான், கேட்டையா? நீ தூங்கிவிட்டாய். நான் அவர்கள் பள்ளியறைக்கதவண்டை நின்று கேட்டிருந்தேன். அவள் கணவன், 'ஓ! மல்லிகா உன்னைப் பிரிந்து போய் நான் கழிக்கிற ஒருபகற்பொழுது ஒரு யுகம்போலிருக்கிறது என்றைக்கு நீயும் நானும் ஒரு நிமிஷமும் பிரியாது வாழ ஈசன் கருணை புரிவாரோ?' என்ருன். எனக்கு அதைக் கேட்டதும் அடிவயிற்றில் இடிவிழுந்தது போலிருந்தது. என் கணவன் என்னை 'அடிசண்டாளீ, நீ தொலைந்துபோய் நான் என்று ஸுகப்படப் போகிறேனே?' என்கிருன். இந்தச் சிறுக்கிக்கோ இத்தனை போகங்களுமிருக்கின்றன. இவள் கணவன் யாரோ? அவன் பகலில் வருவதில்லையே. வந்தால் அவனை என் கண் வலையில் அகப்படுத்திவிட்டு, இச்சிறுக்கியைத் தாதிவேலையில் அமர்த்திக் கொள்வேனே அதற்கு ஸமயம் வாய்க்கவில்லையே' என்றனள். இளையவள், 'ஆமாமடி! அக்காள்! வரவர மல்லிகாவுக்குக் கர்வம் கூட அதிகரித்து விட்டதடி! தன் கணவன் தன்னைக் கண்ணில் வைத்து இமையால் மூடிக்கொண்டிருக்கிருனும். தனக்கு எது இஷ்டமோ அது உடனே கிடைக்குமாம். இவளுக்கு நாம் எதாவது ஒரு விஷமம் செய்தே யாகவேண்டும்' என்றனள்.

இவ்வாறு அவ்விருவரும் யோசித்து, வீட்டுக்கு வந்து மல்லிகாவோடு உல்லாஸமாகப் பேசிக்கொண்டிருக்கையில் 'அடி! குழந்தாய்! உன் கணவனை நாம் காணவில்லையே! அவரை நமது ஊருக்கு அழைத்துப்போய் விருந்து செய்விக்க வேண்டாமா?' என்ருள். மல்லிகா கணவன் முகத்தையே கண்டிராதவளாதலால், 'ஐயோ! நமது தாய் தகப்பன்மார்கள் நமது கணவரைக் கண்டால் எவ்வளவோ மகிழ்ச்சியடைவார்களே. நமது பிறந்தகத்தில் நமது அகமுடையானுக்கு ஒருநாளாவது விருந்திடவில்லையே' என்று நினைத்து, 'அக்காள்! நான் எல்லா ஸுகத்தையும் அனுபவித்தும்; ஒரு பெருங்குறையால் தினமும் வருந்து

கிறேன். என் கணவர் முகத்தை நான்கண்டதே இல்லை. அதை நான் பார்க்கப்படாதென்று அவர் உத்திரவு கொடுத்திருக்கிறார்' என்றாள்.

உடனே அவ்விருவரும், 'ஐயையோ! உன்னைக் கெடுத்தானே பாவி! எவனோ ஒரு குரூபனான ராக்ஷஸன் நீ மலையிலிருந்து விழுவதைக்கண்டு, உன்னை இங்குமாயையால் எடுத்துவந்து மாயையாலேயே இவையெல்லாம் இயற்றியிருக்கிறான். அதனாலே உனக்கு இவையெல்லாம் உண்மையானவை யென்று தோன்றின. இவையனைத்தும் மாயை. அவன் முகமும் மகா விகாரம் பிடித்ததாக இருக்கவேண்டும். அதனால்தான் அவன் தனது முகத்தை நீ பார்க்கப்படாதென்று சொல்லுகிறான். ஐயோ! உன்கதி இப்படியா ஆயிற்று! நீ இறந்திருந்தால் எங்களுக்குப் பலவிதத்திலும் ஸந்தோஷமாக இருக்குமே! உன்னிடத்தில் பால்யம் இருக்குமளவும் உன்னை அவன் மனைவியாக அனுபவித்து விட்டு, நீ கிழவியானதும் உன்னை அவன் தின்றுவிட எண்ணி இருக்கிறான். இன்றிரவு அவனை யாரென்று நீ அவசியம் அறியவேண்டும்' என்றனர்.

கரைப்பார் கரைத்தால் கல்லுங்கரையுமன்றோ? ஐயோ பாபம்! மல்லிகா தனது ஸஹோதரிகள் தன்னைக் கெடுக்க இவ்வாறு உபாயம் பண்ணுகிறார்களென்று எண்ணாமல், 'அடி அக்காள்! அவர் முகத்தை நான் எவ்வாறு அறிகிறது? ஒருபாயஞ் சொல்லு' என்றனள். உடனே அவள்தமக்கைமார், 'குழந்தாய் இன்று உன் பள்ளியறையில் ஒருவிளக்கு ஏற்றிவைத்துத் தெரியாமல் அதை மறைத்து வைத்திரு. உன் கணவன் தூங்கும்பொழுது, நீ மெல்ல எழுந்திருந்து ஒரு கையில் வாளும் மற்றொரு கையில் விளக்குமாக எடுத்துக்கொண்டு, அவன் முகத்தைப் பாரு. நாம் சொல்லுகிறபடி ராக்ஷஸனாக இருந்தால், உடனே இவ்வாளினால்அவனை வெட்டிவிடு. அல்லது ஸுந்தர புருஷனாக இருந்தால் நல்லதாயிற்று' என்றனர்.

யாருக்கும் கஷ்டகாலத்தில் நல்ல புத்தி தோன்றாதன்றோ!

இந்த மல்லிகாவும் தமக்கைமார் சொல்லைக்கேட்டு ஒரு விளக்கையும் வாளையும் எடுத்து அவ்வறையில் ஒளித்து வைத்திருந்து, வழக்கம்போல இரவு பத்து நாழிகைக்கு மன்மதன் வந்து அவளுடன் இன்புற்றிருந்து தூங்கிய பிறகு, இரவு பதினைந்து நாழிகைக்கெல்லாம், விழித்துக் கொண்டு எழுந்து ஸஹோதரிகள் சொன்னவற்றை நினைந்து 'இப்பொழுது என்ன செய்யலாம்? இவர் முகத்தைப் பார்ப் போமா? ஐயோ! இவர் நமக்கு ஸகல நன்மைகளையும் செய் திருக்கிறாரே! இந்தப் புருஷர் ராக்ஷஸராக விருப்பாரா? ஒரு நாளுமில்லை. ஆனால் இவர் என் தமது திருமுகத்தை எனக்குக் காட்டமாட்டே னென்கின்றார்? இதில் ஏதோ மோசமிருக் கிறது? எழுந்துதான் பார்ப்போமே என்றாலோ, கணவன் சொல்லைக் கடந்த பெரும்பாதகம் வரும். பேயானாலும் நாயகன் சொற்கேட்க வேண்டுமென்று சாஸ்திர மிருக்கின்றது' என் றிவ்வாறு கலக்கமுடன் மயங்கிக் கொண்டிருக்கையில், அவளு டைய கஷ்டகாலமானது அவள் மனத்தைப் பேதித்துவிட, அதனால் அவள் எழுந்து நடுங்கிய கைகளுடன் விளக்கையும் வாளையும் ஏந்தி, மஞ்சத்தருகிற் சென்று நோக்கலும், ஹா! என்ன ஆச்சரியம்! என்ன ஆச்சரியம்!! கோடி ஸூர்ய ப்ரகாச முள்ள வதனமும் இந்திரநீலம் ஒத்த இருண்ட குஞ்சியும், செந்தாமரைபோன்ற திருக்கண்களும், கோவைக் கனிபோன்ற சிவந்த உதடுகளும், மலைகள்போன்ற தோள்களும், துதிக்கை போன்ற கைகளும், ஆலிலைபோன்ற வயிறும் உடையவனாய், கண்டோர் மனத்தைக் கவரும் ரூபஸௌந்தரியம் படைத்த ஒரு திவ்யபுருஷன் மூன்று லோகத்தையும் ஜயிக்கிற ஐந்து புஷ்ப பாணங்களையும் கொண்ட அம்பறாத்தூணியோடும், கரும்பு வில்லோடும், சுரும்பு நாணோடும், அரும்பு நகையோடும், விரும்பு முகமோடும் நித்திரை செய்வதைக்கண்டு திடுக்கிட்டு, உடல் நடுங்கி, மனம் பதறி, மெய் சோர்ந்து, விலவிலத்த கையுடன் விள க்கைத் தாங்குவதற்கும் முடியாதவளாய்த் தடுமாறும்போது,

அவ்விளக்கினின்றும் ஒரு சுடர் அக்காமன் மார்பில் விழவே, அவன் திடுக்கிட்டு அலறிக்கொண்டு, விழித்துப் பார்த்தவுடன், மல்லிகா ஒரு கையில் வாளும் மறுகையில் விளக்குமாக நின்று தடுமாறுவதைக் கண்டு, நடந்த விஷயங்கள் இப்படியிருக்க வேண்டுமென்று ஊகித்து, ஒருபேச்சும் பேசாமல், அவ்வறையின் திறந்த சாளரத்தின் வழியாக ஆகாயத்திற் பறந்து செல்லலுற்றான். அவன் கிளம்புவதைக்கண்ட ராஜ கன்னிகை, நடு நடுங்கி, விளக்கையும் வாளையும் எறிந்துவிட்டு, கணவனது காலை உறுதியாகப் பிடித்துக்கொள்ள, அவன் ஒன்றையும் கருதாமல், அவள்மீது வெறுப்புற்று, ஆகாயத்தில் கிளம்பிப்போய் விட, அதனால் சிறிது தூரம் ககனத்திலுயர்த்தப்பெற்ற மல்லிகா நழுவிப் பூமியில் விழுந்துவிட்டாள்.

அங்கே அவள் தான் செய்ததை நினைத்து, அழுது புலம்பி, ஆற்றொணாத் துயரத்துடன் கதறிக்கொண்டிருக்கையில், அனங்கன் அவளருகில் வந்து, 'ஓ! பேதையே! புத்திகெட்டவளே! உனக்கு நான்பண்ணின உபகாரத்துக்கு நீ நல்ல பிரதிசெய்தாய்! உனக்கு எவ்வளவோதடவை புத்தி சொல்லியிருந்தும், அதைக் கேளாமல் உன் ஸஹோதரிகள் பேச்சைக்கேட்டாய். அதன் பயனை இதோ அடையப்போகிறாய். என்னை நீ இனி ஒருபோதும் காணமாட்டாய். உன் ஸஹோதரிகளுக்கும் தக்க சிக்ஷை விதிக்கிறேன். என்னிடத்தில் நீ எப்பொழுது ஸந்தேஹம் வைத்தையோ அப்பொழுதே நீ என்னை இழந்துவிட்டாய். கணவனிடத்து ஸந்தேஹப்படுகிற ஸ்திரீ ஸுகமடையமாட்டாள்'என்று சொல்லிவிட்டு, மறைந்துபோய்விட்டான்.

## அத்தியாயம் 7

கற்புடை மங்கையர்க்குக்கணவரைப் பிரிந்த நாள்கள் அற்பமாயிருந்தபோதும் அதிகமாய்க் கஷ்டப்படுவார் என்பது அனுபவ மன்றோ? அப்படியே மல்லிகாவும் தனது நாயகனான காமன் அகலவே கடுந்துயருழந்து, தனது பெண் புத்தியின் கீழ்மை

யையும், தன் ஸஹோதரிகளின் வஞ்சனையையும் நினைந்து, 'ஐயோ! இனி நமக்கு ஒருகதியுமில்லையே! ஸ்திரீகளுக்கு விதித்திருக்கிற தர்மம் ஒன்றேயொன்றுதானே! அவர்களுக்கு யாகம் வேண்டாம், யஜ்ஞம் வேண்டாம், ஓதல் வேண்டாம், ஒழுக்கம் வேண்டாம், தானம் வேண்டாம், தருமம் வேண்டாம், ஒன்றும் வேண்டாம். கணவன் சொல்லைக் கடவாமை என்ற ஒன்றுதானே வேண்டும்! அதுதானே அவர்களுக்குத் தர்மம். உலகத்திலே எத்தனை ஸ்திரீகள் இவ்வொரு தர்மத்தையும் செய்ய முடியாமல் நரகத்தில் விழுகிறார்கள்! அவர்களைப் பார்த்து நான் பரிஹாஸஞ் செய்து வந்தேனே! இப்பொழுது என்செய்தி என்னவாயிற்று? நான் பரிஹாஸம்பண்ணின ஸ்திரீகள் என்னை இப்பொழுது கண்டால் என்ன சொல்லுவார்கள்! ஐயோ! என் மனத்துக்கு நான் எத்தனையோ புத்திசொல்லி அடக்கிவைத்திருந்தும், அது அடங்கினதுபோலத் தோன்றி, சாம்பல் பூத்த நெருப்புப்போல் உட்புறத்தில் விஷமிருந்துகொண்டு, என்னைக் கெடுத்துவிட்டதே! ஹே! பதிவ்ருதா ஸ்திரீகளே! என்னை இகழாதேயுங்கள்! நான் பண்ணின பாபத்திற்கு பிராயச்சித்தமேயில்லை. ஓ! ஈசா! இன்னும் ஏன் நான் உயிரோடிருக்கிறேன்? ஆ! தெய்வமே என்னை ஏன் ரௌரவாதி நரகங்களிற் பிடித்துத் தள்ளி வதைக்கக்கூடாது?' என்று பலவாறு கதறிப்புலம்பியும், தன்னையே வைதும், தன் சரீரத்தில் தானே அடித்துக்கிள்ளிக்கொண்டும், துக்கம் அடங்காமையால், 'இனி உயிர் வைத்திருப்பதில்லை' என்று துணிந்து, ஓராற்றில் விழுந்தாள், அதற்கு அரசனான வருணதேவன் இவளைக் கண்டு, 'ஹா! இவள் மகாபதிவ்ருதையாயிற்றே! இவள் நமது நண்பன் மதனன் மனைவியில்லையா? என்று அவளை அலைமீதெடுத்துக் கரையில்விட்டமையால் ராஜகன்னிகை, 'இஃதேது மக்கு ஜலத்திலும் உயிர்போகவில்லையே!' என்று வருந்தி, ஒரு பெரிய விருக்ஷத்திலேறிக் கீழே ஒரு பாறையில் விழலும், வாயு தேவன் முன்போல அவளைக் காப்பாற்றிவிட்டமையால், அவள்

அதிகம் வருந்தி, தீவளர்த்து, அதில் குதிக்க, அக்னிதேவன் அவளை அறிந்துகொண்டு, தன்னுடைய உஷ்ண ஸ்வபாவத்தை மாற்றிக்கொண்டு, குளிர்ந்தஜலம்போல ஆறிவிடக்கண்டு, அவள் பெருங்கோபமும் விசனமும் கொண்டு,ஒரு வாளை எடுத்து, 'நான் பதிவ்ருதையாயிருந்தால், இவ்வாள் என் கழுத்தை அறுக்கக்கட வது' என்று ஓங்கலும், யமன் ப்ரஸன்னனாகி, 'ஓ! மல்லிகா நீ என்ன செய்தாலும் உனக்கு உயிர் போகாது. நீ உன் கணவனை அடையவேண்டுமென்றால், தேவதைகளுக்குப் பணிவிடைசெய்து, அவர்களுடைய ப்ரீதியை ஸம்பாதித்துக் கொள்ளவேண்டும்' எனக்கேட்டு, அவள், 'ஓ! தேவனே! என் கணவன் வஸிக்கும் லோகம் எது? அவருக்கு என்னிடத்து விச்வாஸம் வரும்படி நான் செய்யவேண்டியது யாது? கிருபை செய்யவேண்டும்' என, அவன், 'பெண்ணே! ரதிதேவியானவள் உன்மீது மிகவும் கோபமாயிருக்கிறாள். அவளை எப்படியாவது அனுஸரித்து, அவளுக்குப் பணிவிடை செய்துகொண்டுவந் தால், அவளுக்கு உன்மீது கருணையுண்டாகி, உன்னை அவள் வாழ்விப்பாள்' என்றான்.

இவ்வார்த்தைகளைக் கேட்டுக்கொண்டு மல்லிகா காடு மலை வனங்களைக் கடந்து, நிர்மானுஷ்யமான ஒருப்ரதேசத்தை யடைந்ததும், அங்கேதனது இரண்டு ஸஹோதரி களையும் கண்டு, 'ஓ! என்தமக்கைமீர் நான் பட்டதைக் கேளீரோ?' என்று அலறி அழுதுகொண்டு, அவர்கள் அடியில் வீழ்ந்து புலம்ப, அவர்கள் இவளுக்கு நேர்ந்த விபத் தைக்கேட்டு, பரிதபித்தவர்போலப் பாசாங்குசெய்து அழுதன ரேனும், அந்தரங்கத்தில் மகிழ்ந்திருந்தவராதலால், 'அம்மா குழந்தாய் காலம் படுத்தும்பாட்டை யாரறிவார்? அதன்முன் யார் உபாயம் பலிக்கும்? விதி வலிது' என்று மேலுக்கு ஸமாதானங் கூறிவிட்டு, கேவலம் அயலார்போல அப்பாலே செல்லும் போது, ஒருத்தி, 'அக்காள்! இப்போது நாம் அந்த மன்மதனைக் கல்யாணஞ் செய்துகொள்ளலாம். மல்லிகா

எந்த மலையினின்றும் குதித்தாளோ அதே மலையிலிருந்து நாமும் விழுவோம். நம்மையும் மதனன் விரும்பிக் கல்யாணஞ் செய்து கொள்ளட்டும்' என, மற்றவள், 'ஸரி, இது நல்ல உபாயந்தான்' என்று ஆமோதித்து, இருவருஞ்சென்று, காலன்பிடர் பிடித்துத் தள்ளுவதால், பின் விளைவது அறியாது, அம்மலைமீதிருந்து குதிக்கவே, மதனன் இதுதான் ஸமயமென்று அவர்களைப் பாதாளத்தில்தள்ளி, நசுக்கிக் கொன்றுவிட்டான்.

நிற்க, ரதிதேவியைத் தேடிச்சென்ற மல்லிகா பசி, தாகம், வெய்யில், மழை, பனி முதலிய ஒன்றையும் கருதாமல் கருமமே கண்ணாக அலைகையில், ஒரு பெருங்காட்டை அணுகி, அதனுள் நுழைந்து திரியும்போது, சில ரிஷிகள் தவஞ்செய்து கொண்டிருக்கக்கண்டு, அவர்களை வணங்கித் துதித்து, அவர்களிடத்தில் தன்குறையைக்கூறி, 'நான் ரதிதேவியை எவ்வாறுகாண்பேன்?' என்று கேட்க, அவர்கள் இவள்மீது இரக்கமுற்று, ஒரு கமன குளிகையைக் கொடுத்து, 'இதை வாயில் போட்டுக் கொண்டு, உனக்கு இஷ்டமான இடத்தை நினைத்தால், உடனே அங்குப்போய்ச்சேருவாய்' என்று ஆசீர்வதித்தனர். அதைப்பெற்றுக்கொண்ட மல்லிகா அவர்சொல்லியபடிசெய்து, ரதிதேவியின் அரண்மனை வாசலுக்குச் செல்ல வேண்டுமென நினைத்தவுடன், ஒரு க்ஷணத்துக்குள் அவ்விடம் போய்ச் சேர்ந்தாள்.

## அத்தியாயம் 8

தன் அரண்மனை வாசலில் வந்து நிற்கும் மல்லிகாவைக் கண்ட ரதிதேவிக்குண்டான கோபத்தை எடுத்து வருணிக்கவும் முடியுமோ? கண்களில் தீப்பொரிபறக்க, அவள் சிங்கம் போலப் பொங்கி யெழுந்து, தன் எதிரில் அங்கங் குன்றி, எங்கு மொடுங்கி, தஞ்சம் நீ என வந்தடிபணியும் மல்லிகையைநோக்கி, "அடிசண்டாளீ! துரோகி பாதகி! காதகி! வேசி! என் கணவனை மயக்கிய காலதூதி! உன்னை இனி விடுவேனு? உன்னைப்

பல நாளாகத் தேடித்திரிந்தேன். நீ புஷ்கரத்வீபத்தில் ஒளிந்து கொண்டாய் நான் அங்கு வரமாட்டேனென்று எவ்வாறோ அறிந்து கொண்டாயே. எத்தனைநாள்தான் இப்படி ஒளியலாம்? என்னை எய்த்துவிட்டு நீ வாழமுடியுமோ? எமனறியாது உயிர் போமோ? உரலில் அகப்பட்டது உலக்கைக்குத் தப்புமோ? நல்லவேளையாக நீ என்வீட்டு வாசலிலேயே வந்து அகப்பட்டுக்கொண்டாய். பார் உன்னை என்னபாடு படுத்துகிறேன்!" என்று அவளை ஹிம்ஸிக்க வர, ராஜகன்னிகை தலைகுனிந்து, அவள் பாதத்தில் வீழ்ந்து, 'ஹே! தேவீ! தேவீ! உமது அடியாள் வந்திருக்கிறேன். உமது பாததூளிக்கும் ஸமானமாகாத என்மீது ஏனோ இத்தனை கோபம்? அடியேன் தேவியினது தரிசனத்தின் பொருட்டே வந்து, காத்திருக்கின்றேன். ஹே! லோகமாதா! ஹே! ஸுந்தரவனிதா! உம்மைப்போன்ற மங்கள தேவி எந்தலோகத்திலும் இல்லையே. ஜகத்காரண பூதரான சிவபெருமான் திருமகளில்லையோ நீங்கள்! உலகம் வாழ்வது உம்மாலன்றோ! நீர் இல்லையானல் உலகத்தில் அழகேது? இன்பமேது? நான் என்ன ஒரு பதார்த்தமா? அதிலும் உமது கோபத்தைத் தாங்க வல்லவளா? உமக்கு என்மீது என்னகோபம் வந்தாலும், அடிமையாகிய நான் வாய்பேசாமல் ஊழியஞ் செய்ய வேண்டியவளே' என்று பணிவோடு சொல்ல, ரதிதேவி சிறிது கோபமடங்கி, 'ஸரி இவளை அடிமையாக்கிக்கொண்டு, பழிக்குப் பழி வாங்குவோம்' என்று நினைத்து, 'நீ எனக்கு உண்மையாக ஊழியஞ்செய்வாயென்பதற்கு என்ன ருஜு?' என்றாள் மல்லிகா "தேவி! கனியின் ருசியைக் கடித்தாலன்றோ அறியலாம்? அப்படியே எனக்கு ஒரு ஏவலிட்டால், அதை நான்செய்து முடிக்கும் திறமையால் என் அந்தரங்க பக்தியைக் காணலாம்" என்றனள்.

ரதி, "ஆ! அப்படியா! இதோ பார், என் புருக்களின் ஆகாரத்துக்காக எள்ளு, கொள்ளு, பயறு, நெல் முதலிய நவ

தான்யங்களையும் சேர்த்துக் குவித்திருக்கிறேன். எல்லாமாகச் சேர்ந்து ஒன்பதினுயிரக் கலமிருக்கின்றன. நீ இத்தான்யங் களைத் தனித்தனியாகப் பிரித்து ஒன்பது குவியலாகக் குவிக்க வேண்டும். ஒரு மணி தான்யங்கூடச் சிதறப்படாது "என்ருள்.

ராஜகுமாரத்தி சரியென்று போய்ப்பார்க்க, எல்லாம் கலந்து ஒரே குப்பலாக மலைபோலக்கிடக்கக்கண்டு, 'ஐயோ! நானென்ன செய்வேன்?' என்று எங்கி மயங்குகையில், மன்மதன் இவள் மீது இரக்கமுற்று எறும்பரசனை ஆஜ்ஞாபிக்க, அவன் ஆஜ்ஞை யால் பலகோடி எறும்புகள் அங்கு சூழ்ந்துவந்து, ஒவ்வொன்றும் ஒவ்வொரு தானியமாக எடுத்து, ஒன்பது குவியலாகக் குவித்து விட்டுப்போய்விட்டன. சூரியாஸ்தமனமானதும், ரதிதேவிவந்து பார்க்க, ஒரு மணி தான்யங்கூடக் குறையாமல் எல்லாம் தனித் தனியாகக் குவிக்கப்பெற்றிருக்கக் கண்டு, இது மானுஷக்ருத் திய மன்று என்று பெருங் கோபமுற்று, 'அடி மாயாவீ! நீ மந்திரங் கற்றிருக்கின்றனையா?' என்று வைதுவிட்டு 'ஓ! சண்டாளீ! உனக்கு வேறு வேலை யிடுகிறேன். நீ போய்க் குபேரபட்டணத்துக் கருகிலுள்ள கனகாபுரத்தில் வஸிக்கும் ஸ்வர்ணமேஷங்களின் கனகரோமத்தில் சிறிது கொண்டுவா' என்று ஆஜ்ஞாபித்தனள்.

மல்லிகாவுக்கு அப்பட்டண மிருக்கும் திசை எப்படி தெரி யும்? அவள் தன் தலைவிதியை நினைத்துக்கொண்டு, ஓராற்றங் கரையில் உட்கார்ந்து அழுதுகொண்டிருக்கையில், வருண தேவன் ப்ரத்தியக்ஷமாகி, 'ஓ! ஸௌந்தரீ! நீ அஞ்சவேண்டாம். இவ்வாற்றைக்கடந்து அப்புறஞ் சென்ருல்,ஆங்கு ஒரு புலியைக் காணுவாய். அதற்கு அஞ்சாமல் அதனருகிற் சென்று இக்கணை யாழியை அதன் தலையில் வைத்தால், அது உன்னைத் தூக்கிக் கொண்டு ஸ்வர்ணமேஷங்கள் வஸிக்குமிடத்திற் கொண்டுபோய் சேர்க்கும். நீ அங்குச் சென்றதும், அவ்வாடுகளைக் கண்டு, அரு கில் செல்லாதே. அவை உன்னைக் கொன்றுவிடும். ஸந்தியா லத்தில் அவை நீர் குடிக்க ஆற்றுக்குப் போயிருக்கும்வேளை

பார்த்திருந்து, கீழே உதிர்ந்திருக்கும் மயிரைத் திரட்டிக் கொண்டு வந்துவிடு, புலி அதுவரையில் காத்திருந்து உன்னை இங்குக் கொண்டுவந்து சேர்த்து விடும்' என்றான். மல்லிகா அக்கடவுளுக்கு வந்தனமளித்து, மிகுந்த பயபக்தியுடன் அவன் கொடுத்த கணையாழியைப் பெற்றுக்கொண்டு, புலியினிடத்துச் சென்று அவன் கூறியபடி செய்தாள். அது உடனே அவளை ஸ்வர்ணமேஷ ஸ்தலத்திற்குத் தூக்கிப்போயிற்று. அவள் வருணன் கூறியபடி காத்திருந்து, கனக ரோமத்தை எடுத்துக் கொண்டுவந்து ரதிதேவியினிடத்திற் கொடுத்தாள்.

அத்தேவிக்கு வந்த கோபத்துக்கும் பொறுமைக்கும் அளவேயில்லை. 'ஸரி இவளைக் கொன்றுவிடுவதே கருமம்' என்று நினைத்து, 'அடி சிறுக்கி! நீ இன்றே புறப்பட்டு யமபுரிக்குச் சென்று தர்மதேவன் மனைவியான சாமளையினிடத்திலிருந்து சிந்தாமணித்தைலம் பெற்றுவா' என்றாள்.

அதைக் கேட்டதும் மல்லிகா 'ஸரி இனி நாம் பிழைப்பதில்லை. இறந்துபோவது திண்ணம். ஆயினும் கணவனை இழந்து வாழ்வதினும் காலனுலகு செல்வது உத்தமம்' என்று நினைத்து, 'தேவீ! இதோ போகிறேன்' என்று, அவள் கொடுத்த ஒரு தந்தப்பெட்டியை எடுத்துக்கொண்டு புறப்பட்டாள்.

சக்ரவர்த்திக்குப் பிறந்து, மன்மதனுக்கு வாழ்க்கைப்பட்டு, அருமையும் பெருமையுமாக வாழ்ந்த அவளுக்கு யமலோகத்துக்குப் போகும்வழி எப்படித் தெரியும்? ஐயோ! அவள் என்ன செய்வாள்? பேதையான ஒரு பெண்பால்தானே அவள்! அவளுக்கு யோசனை சொல்லுகிறவர்களு மில்லை. அப்படிச் சொல்லுகிறவர்களைக் கூட ரதி கோபித்துச் சபிக்கலானாள். ஆதலால் எவரும் அவளுக்கு உபாயம் கூறத் துணியவில்லை. 'என்னசெய்வோம்?' என்று அவள் கலங்குகையில், அவளுக்கு மகரிஷிகள் முன்கொடுத்த கமன குளிகை நினைவுக்குவந்தது. அதை அவள் வாயில்போட்டுக்கொண்டு, யமலோகத்தை நினைத்

தாள். உடனே அக்குளிகையின் மகிமையால் அவ்லோகத்தை யடைந்தாள். அங்குச் சேர்ந்ததும் யமதர்மராஜன் ஸபையைவிசாரித்துக்கொண்டு,அவன்முன்னேபோய், தான் வந்தகாரியத்தைத் தெரிவித்தாள். தர்மன் அவளுடைய வணக்கத்தைக் கண்டு மகிழ்ந்து, அவளை அழைத்துக்கொண்டு, அந்தப்புரத்துக்குப்போய்த் தன் மனைவியான சாமளையினிடத்தில் ஒப்பித்தான். அவள் மல்லிகைக்குப் பலவிதமான உபசாரங்களும் செய்யத் தலைப்பட, ராஜகுமாரத்தி, 'தேவீ! யான் ஒரு அடிமை. எனக்கு நீங்கள் உபசாரஞ் செய்வது தகுதியன்று' என்று, அவள் கொடுத்த நல்ல ஆகாரங்களைக்கூடவேண்டாமென்று நிராகரித்து இரண்டுகை நீர் மட்டும் அருந்தி, அத்தேவி கொடுத்த சிந்தாமணித் தைலத்தைப்பெற்றுக்கொண்டு திரும்பினாள்.

ஐயோ! அவளுடைய கஷ்டகாலம் இன்னும் விலகினபாடில்லையே! அவளுடைய பெண்புத்தி இன்னும் போகவில்லையே! 'ஆறு வடியும்போது கொல்லும், பஞ்சம் தெளியும்போது கொல்லும்' என்றபடி அவளுக்கு ஒருதுர்ப்புத்தி தோன்றிற்று. அவள், "நாம் பல வருஷங்களாக ரதிக்கு வேலைசெய்து இளைத்துப் போனோமே! இந்தச் சிந்தாமணித் தைலத்தில் சிறிது தலையில் தடவிக்கொண்டால், யௌவனம் வருமென்கிறார்களே! நமக்கு யௌவனமும் அழகும் வருமாயின் மதனன் நம்மிடத்துக் காதல் கொள்ளாரா? திரும்பவும் அவரிடத்தில் வாழோமா' என்று நினைத்து அத்தைலப் பெட்டியைத் திறந்தாள்.

ரதிதேவி அப்பெட்டிக்குள் நித்ராதேவியை அடைத்திருந்தமையால், அவள் வெளிக்கிளம்பி வந்து பார்க்க, அருகில் ஒரு தேவதையையும் காணாது, மல்லிகாவைமட்டுங் கண்டு, 'அகப்பட்டுக்கொண்டாள்' என்று அவளைப்பிடித்துக்கொண்டாள். உடனே மல்லிகைக்குப் பெருந்தூக்கம் வந்துவிட்டது. அவள் அங்கேயே விழுந்து மூர்ச்சித்துப் போய்விட்டாள்.

# அத்தியாயம் 9

தேவஸாந்நித்யமுள்ள லோகத்தில் நடுவழியில் இவள் விழுந்து கிடப்பதை வாயுதேவன் கண்டு இரக்கமுற்று, மன்மதனுக்குத் தெரிவிக்க, அவன், 'ஐயோ! இக் கன்னிகை நம் நிமித்தந்தானே இவ்வளவு கஷ்டத்தையும் படுகிருள்! இனி இவளைக் கைவிடப்படாது. குற்றஞ்செய்வது ஸ்திரீகள் ஸ்வபாவம். அவள் பண்ணின குற்றத்திற்குப் பட்டதும் போதும் என்று எண்ணி, நித்ராதேவியைக் கூப்பிட்டு, ராஜகன்னிகையைவிட்டுப் போம்படி ஆஜ்ஞாபித்தான். அவள் அவன் உத்திரவுக் கஞ்சி ஓடிப்போய்விட, மல்லிகா விழித்துக்கொண்டு, பக்கத்தில் தன் கணவனைக்கண்டு, குதூஹலங்கொண்டு, அவனடியில் வீழ்ந்து கண்களில் நீர் பெருக, 'ஆ! என் நாதா! உமக்கு என்மீது இன்னும் இரக்கம் வரவில்லையோ! நான் மகாபாபியோ! உம்முடைய திருமுகத்தைக் கண்டு மகிழ்ந்திருக்கும் பாக்யத்தை நான் பெறவில்லையோ! எனக்கு இன்னும் விமோசனம் வரவில்லையோ? நான் பட்ட கஷ்டங்கள் போதாதோ? எனக்கு இன்னும் நல்லகாலம் வரவில்லையோ?' என்றழுது புலம்பினுள்.

மதனன் இரங்கி, 'நீ போய் ரதியினிடத்துத் தைலத்தைக் கொடு. நான் உன்னைக் கலியாணஞ் செய்துகொள்ள ஏற்பாடு செய்கிறேன்' என்று சொல்லிவிட்டு, சிவபெருமானிடத்து மல்லிகாவின் விருத்தாந்தங்களை யெல்லாம் எடுத்தோதி, 'ஐயனே! நீங்கள் அக்கன்னிகையை ரக்ஷிக்காதுபோனுல், அவள் இறந்துபோவது திண்ணம். உமக்குப் பெரும்பழிவந்து ஸம்பவிக்கும்' என்றுன். சிவபெருமான் மல்லிகாவின் நற்குணத்தை முன்னமே கேள்வியுற்றிருந்தமையால், அவளிடத்து அன்புகூர்ந்து, 'மதனு! நீ அவளை இரண்டாம் மனையாளாக ஏற்றுக்கொள். ரதி அதற்கு ஸம்மதிப்பாள்' என்றனர்.

நிற்க, தைலத்தை எடுத்துச் சென்ற ராஜகுமாரத்தி ரதியினிடம் போனதும், அவள் எந்த தெய்வத்தின் மகிமையி!

ளுலோ சாந்தமடைந்து, முன்போலக் கோபித்துக்கொள்ளாமல், 'ஓ ! என் கண்மணீ ! நீதான் உத்தமி ! நீதான் பாக்யவதி ! உன்னைக்கண்டு பொறாமைப்பட்ட என்னை மன்னித்துவிடு. உனக்கு ஏற்ற கணவர் எனது மன்மதனே ! அவருக்கு ஏற்ற மனைவி நீயே!' என்று அவளைக்கட்டியணைத்து முத்தமிட்டு, 'நீ என்னுடைய தங்கைபோல என்னோடு வாழலாம். நான் உனக்குத் தாய்போலவும் தமக்கைபோலவும் இருப்பேன். நீ நீடூழிவாழ்க' என்று ஆசீர்வதித்தனள்.

பிறகு அவ்விருவரும் சேர்ந்து கைலாஸம்சென்று, சிவபெருமானை வணங்கி நிற்க, சங்கரனார் அவர்களை ஆசீர்வதித்து, மன்மதனைக் கூப்பிட்டு, 'ஓ! மதனா! நீ இவளை மனைவியாக ஏற்றுக்கொள். எல்லாரும் அறிய இவளுக்கு இங்குக் கல்யாணம் நடக்கட்டும். இவள் உன்மனத்தையும் அபகரித்த ஸுந்தரியாதலால், மதனமனோஹரி என்ற பெயரை இன்று முதல் கொள்ளக்கடவள்' என்று அனுக்ரஹஞ் செய்ய, அவர் ஆஜ்ஞைப்படி மல்லிகாவுக்கும் மன்மதனுக்கும் விவாஹமஹோத்ஸவம் ஸகல ஸம்ப்ரமங்களுடனும் நடந்தேறியது. அவள் தான் பட்ட கஷ்டங்களை யெல்லாம் மறந்து, தான் காதலித்த புருஷனையும் மணந்து, தன் ஜன்ம விரோதியான ரதியையும் துணைவியாகப் பெற்று, ஆனந்தமாக வாழ்ந்தாள். ஸுலோசன மன்னனும் இவ்விருத்தாந்தங்களை யெல்லாம் நாரதர் சொல்லக்கேட்டு, மகிழ்ச்சிக் கடலுள் ஆழ்ந்து, தன் நகரமுழுமையும் அலங்கரிப்பித்து, உத்ஸவங்கள் கொண்டாடும்படி ஆஜ்ஞாபித்தான். எல்லாரும் குதூஹலத்துடன் உத்ஸவங்கொண்டாடிப் பெரும் ஸுகத்தையடைந்தனர்.

'கற்பெனப்படுவது சொற்றிறம்பாமை'

85868

முற்றிற்று

MADRAS: THE GUARDIAN PRESS, MOUNT ROAD

அடியிற்கண்ட புஸ்தகங்கள் கீழ்க்குறித்த விலாஸத்திற்கு எழுதிப் பெற்றுக்கொள்ளலாம்

---

| | | | | |
|---|---|---|---|---|
| ஐவன்ஹோ ... ... ... | 0 | 6 | 0 |
| ஷை 2-ம் பாகம் | அச்சிலிருக்கிறது | | |
| கதைக்கொத்து : மலர் 1. ... | 0 | 3 | 0 |
| ஷை 2. ... | 0 | 3 | 0 |
| மல்லிகா ... ... .... | 0 | 2 | 0 |

V. RAJAGOPALA AIYANGAR,
TAMIL PANDIT,
*Patrachary Street,*
*KUMBAKONAM.*